ISSN : 2456-821X அவையம் 3(2) Nov.2019 P.No. : 22 - 54

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# சங்கத் தமிழரின் வாழ்வியல் மற்றும் வரலாற்று நோக்கில் நவிரமலை

**முனைவர் க. மோகன்காந்தி**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 01.11.2019** **ஏற்கப்பட்டது : 28.11.2019**

## முன்னுரை

*சங்கத் தமிழரின் வாழ்வியல் என்பது ஈராயிரம் ஆண்டுகள் பழமையினை உடையது. எட்டுத்தொகை நூல்கள் சங்கத் தமிழரின் தொடர்ச்சியான வாழ்வியலை எடுத்துரைக்கவில்லை. ஆனால் பத்துப்பாட்டு நூல்கள் ஒரு தொடர் சங்கிலியைப் போல் குறிப்பிட்ட பகுதியை அரசாண்ட மன்னன், மக்கள், வாழ்வியல் முறைமைகளை எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.*

*பத்துப்பாட்டு நூல்களில் பத்தாவது இடத்தில் வைத்துப் போற்றப்படும் நூல் மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை. நூலில் இடம் பெறும் அடிகளின் வழியாகப் பெயர் பெற்ற ஒரே சங்க நூல் மலைபடுகடாம். "மலைபடுகடாம் மாதிரத்து இயம்ப" – 348 என்னும் அடியால் அறியலாம். மலை+ஓசையை மையப்படுத்தி அமைந்த பெயராகும். இவ்வடி மலையின் சிறப்புகளையும் அதன்கண் எழும் ஓசைகளையும் 67 வது அடியில் தொடங்கி 398 ஆவது அடிகள் வரை அதாவது 331*

அடிகள் மலை, மலைமக்களின் வாழ்வியல், விலங்குகள், தாவரங்கள் என வளம் பொருந்திய நவிரமலையின் சிறப்புகள் தொடர்ச் சங்கிலியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மலைபடுகடாம்**

மலைபடுகடாம் என்னும் நூலின் பாட்டுடைத் தலைவன் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் ஆவான். இந்நூல் 583 அடிகளால் பாடப்பெற்ற நூலாகும். பத்துப்பாட்டில் உள்ள பத்து நூல்களில் 5 ஆற்றுப்படை நூல்களாகும். ஆற்றுப்படை நூல்களில் மிகவும் பெரியது மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை. இந்நூல் பரிசில் பெற்ற இசைவாணர்கள் (கூத்தர்கள்), பரிசில் பெற இருக்கும் இசைவாணர்களை ஆற்றுப்படுத்தும் விதத்தில் அமைக்கப்பெற்றதாகும்.

மலையடிவாரத்திலுள்ள ஒரு குறுங்காட்டிடையே பரிசில் பெற்ற கூத்தர் தலைவன், பரிசில் பெற சென்று கொண்டிருக்கும் கூத்தர் தலைவனை ஆற்றுப்படுத்துகிறான். இதிலிருந்து மலையில் பயணம் மேற்கொள்ளுதல், வழியின் இயல்புகள், மக்களின் வாழ்வியல் முறைமைகள், மலையின் தோற்றம், நன்மைகள், தீமைகள், விருந்தோம்பல், அம்மலையில் ஏற்படும் பலவகை ஓசைகள் என்று மலையின் சிறப்புகளை நம் கண்முன் நிறுத்துகிறார் இந்நூலைப் பாடிய இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்னும் நல்லிசைப் புலவர்.

**நன்னன் சேய் நன்னன்**

பல்குன்றக் கோட்டத்தின் தலைநகரமான செங்கண்மாவில் (செங்கம்) இருந்து நல்லாட்சிப் புரிந்தவன் நன்னன் சேய் நன்னன் என்னும் புரவலன். தொண்டை மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களில் பல்குன்றக் கோட்டமும் ஒன்று. கி.பி. 10 நூற்றாண்டுவாக்கில் கிடைக்கும் நடுகற்கள் பலவற்றில் பல்குன்றக் கோட்டம் என்னும் சொல்லாட்சி கிடைக்கின்றன. ஆனால்

மலைபடுகடாமில் எந்த ஒரு இடத்திலும் பல்குன்றக் கோட்டம் என்னும் சொல்லாட்சி இல்லை. ஆனால் நூலின் இறுதி அடிகள்,

"மலைநீர் வென்றெழு கொடியில் தோன்றும்

குன்றுசூழ் இருக்கை நாடு கிழவோனே" - (மலைபடு – 582 - 583)

என்று முடிகிறது.

இவ்வடிகள் மலையினின்றும் விழுகின்ற அருவிகள் வென்று உயர்கின்ற கொடிகள் போலத் தோன்றும் மலைகள் சூழ்ந்த பரப்பினையுடைய நாட்டிற்கு உரிமையுடைய தலைவனே என்று முடிகிறது.

குன்று சூழ் இருக்கை என்னும் சொல்லின் பொருளை ஒட்டி பல்குன்றம் என்னும் சொழ்வழக்கு வந்தது என்று கொள்வது மிகவும் பொறுந்தும். செங்கண்மா என்பது செங்கம் என்று மருவியுள்ளது. இவ்வூர் திருவண்ணாமலைக்கு மேற்கே 35 கி.மீ தொலைவில் உள்ளது.

நன்னன் சேய் நன்னன், கொண்கானத்து நன்னனிடம் இருந்து வேறுபட்டவன். கொண்கானத்து நன்னனுக்குப் பெண் கொலை புரிந்த நன்னன் என்ற பெயர் உண்டு. அவன் காலகட்டத்தில் செல்வாக்குடன் வாழ்ந்து வந்த நன்னன் சேய் நன்னனை வேறுபடுத்தவே இந்நூல் பாடப் பெற்றது போல் தோன்றுகிறது.

கொண்கானத்து நன்னன் அவன் நாட்டைச் சேர்ந்த பெண் அரசமாங்கனியை உண்டதால் தன் குடிப் பெண் என்றும் இரக்கம் காட்டாமல் கொன்றவன்(குறுந் 292 – 5-6). பகை நாட்டை வெல்லும் போது பகை நாட்டு அரச பெண்டீரின் தலைமுடியை மழித்துத் தேரைக் கட்டி இழுத்து வந்தவன்(நற்றி – 270 – 9 -11). பரிசிலிருக்கு அடைத்த நெடுங்கதவை உடையவன்(புறம் – 151 – 7-12) என்று சங்க நூல்கள் பரவலாகப் பேசுகின்றன.

ஆனால் நன்னன் சேய் நன்னனோ மக்களின் மனம் கவர்ந்த அரசனாகப் பார்க்கப்பட்டுள்ளான். தன்னைப் புகழுவோருக்கு அரசு முழுதும் தருபவன் (66-67), அவனை சூழ்ந்திருக்கும் அமைச்சர்

முதலானோர் பேரொழுக்கம் கொண்டவர் (73), நன்னனுக்குத் தம் குடிமக்கள் திறை பொருளை அன்பால் தர எண்ணும் மக்கள்(319 - 320), திருமகள் தங்கும் மார்பன் (347-348), பகைவரை அழிப்பவன், தாழ்ச்சி இல்லாதவன், பூங்கொடி போல் வாளின் கணவன்(425-426), நன்னனின் பழையதாகிய செங்கண்மா மூதூரில் வாழ்பவர், தம் ஊரையின்றிப் பிற ஊருக்குப் புலம் பெயர்ந்து செல்லாத பழங்குடி மக்கள் (478-480) ஆவர். கொடையாகப் பலவற்றை வழங்குபவன், பரிசு பெற வந்த உங்களையும் விட, தம்பால் வந்த உங்களின் வருகையைப் பெரிதும் மகிழ்பவன்(558-560) இவைப் போன்ற பல செய்திகள் நன்னன் சேய் நன்னனின் கொடைத் தன்மையையும், பரிசிலரைப் போற்றும் அவன் நற்குணநலன்களையும் எடுத்துரைக்கின்றன. பெண் கொலை புரிந்த நன்னனின் மகனாக நன்னன் சேய் நன்னனைக் கருத்தில் கொண்டால் நன்னனின் கொண்கான நாட்டிற்கும், நன்னன் சேய் நன்னனின் செங்கண்மாவிற்கும் ஏறத்தாழ 500 கி.மீ தொலைவு இருக்கும் போது இது சாத்தியமற்ற உறவுநிலை என்றே கருத முடிகிறது.

நன்னன் சேய் நன்னன் என்ற சொல்லாட்சி நன்னனின் மகன் நன்னன் என்ற பொருளில் வெளிப்படுகிறது. அதாவது பாட்டனின் (தாத்தா), பெயர் பெயரனுக்க (பேரன்) வைப்பது மரபு. ஆனால் தந்தையின் பெயரையே மகனுக்கு இடும் வழக்கத்தை இப்பெயர் வெளிப்படுத்தியுள்ளது.

நன்னன் சேய் நன்னன் மலைநாட்டுப் பழங்குடி இனத்தலைவன் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. செங்கண்மா(செங்கம்) சுற்றியுள்ள சவ்வாதுமலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் குறிப்பாக வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட சவ்வாதுமலைப் பகுதி புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு என்று பிரிக்கப்படடுள்ளது. குறிப்பாக இம்மலையிலுள்ள கிராமங்களில் தந்தையின் பெயரை மகனுக்குச் சூட்டும் வழக்கம் இன்றளவும் உள்ளது. காளியின் மகனுக்கு காளி என்று பெயர் வைப்பது, துக்கன் மகன் துக்கன், வேடியப்பன் மகன் வேடியப்பன் போன்ற பெயர்கள் சங்ககாலப் பெயர் வைப்பு நீட்சியாகவே கருத முடிகிறது.

**மலையின் தோற்றமும் பாதையும்**

நன்னனைக் காண மலை வழியாகப் பயணிக்கும் கூத்தர்கள் மலையின் தோற்றம், செல்லும்வழி ஆகியவற்றை எடுத்துரைக்கின்றனர். ஒரு அரசனின் சிறப்பினை உலகிற்கு எடுத்துரைக்கும் ஊடகவியலாளர்களாக இக்கூத்தர்கள் உள்ளனர். இது வணிகப் பெருவழியை உருவாக்கும் முயற்சி போலும் தோன்றுகிறது. குறிஞ்சிநிலத் தலைவன், முல்லைநிலக் கட்டமைப்பில் மருதநில நிலவுடைமைச் சமூக வளர்ச்சியை நோக்கிச் செல்லும் கூறுகளாகவே அமைகின்றன.

இம்மலைப் பாதையானது பரப்பி வைத்து கற்பாறையின் பக்கத்தில், நிலத்தில் கிடந்த வழியை எடுத்து நிறுத்தியது(செங்குத்து) போன்ற இடமகன்ற மலையில் கடுமரங்கள் (கடுக்காய்) நிறைந்திருக்கும் என்று வழியின் இயல்பு எடுத்துரைக்கப்படுகிறது.

''கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்

படுத்து வைத்தன்ன பாறை மருங்கின்

எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி'' - (மலைபடு 14 – 16)

இன்றைக்கும் நவிரமலை என்று சொல்லப்படும் சவ்வாதுமலை முழுமையும் உயர்ந்து ஓங்கிக் கடுமரங்கள் நிற்பதைக் காணமுடிகிறது. கடுக்காய்களைச் சேகரித்து இம்மக்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும், மருத்துவப் பயன்பாட்டிற்கும் விற்பனை செய்வதும் இன்றைய சூழலிலும் நடைபெறும் முக்கிய தொழில்களாக உள்ளன.

மலை உச்சியை அடைய வேண்டும் என்றால் அச்சம் கொள்ளாமல் எங்களால் ஏற முடியும் என்ற நெஞ்சுரத்தோடு செல்ல வேண்டும். ஏனெனில் குறுகிய, கல்லை இடித்துச் செய்துள்ள அருஞ்சுர வழி என்று மலைப்பாதையின் அமைப்பை இவ்வடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் ஒரு முக்கியச் செய்தியும் இதனோடு ஒப்பு நோக்க வேண்டியுள்ளது. இந்தக் கடினமான வழியை நீங்கள் அஞ்சாமல் கடக்க, கையில் வில்லையும் அம்பையும் கொண்டு தன் மனைவியுடன் கூடிய கானவர்(வீரர்கள்) நீங்கள் செல்லும் வழியில் இருப்பர். உங்களுக்கு எந்த ஒரு ஆபத்தும் இன்றி அவர்கள் காப்பர் என்று

எடுத்துரைக்கிறார் புலவர். இங்கு மலைக்காவல் புரிவோர் வாழ்வதை நம்மால் அறிய முடிகிறது. இதனை,



"தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்

இடுக்கண் செய்யா தியங்குநர் இயக்கும்

அடுக்கல் மீமிசை அருப்பம் பேணாது

இடிச்சுர நிவப்பின் இயவுக் கொண்டொழுகி" வாளியர் கூடாரம்

(மலைபடு – 17 – 20)

இப்பாடலடிகளில் வரும் வாளியர் என்ற சொல்லாட்சி வீரர்களைக் குறிக்கிறது. சவ்வாதுமலையில் ஏராளமான பெருங்கற்காலத் தடயங்களான பெருங்கற்காலப் புதைவிடங்கள் (கற்திட்டைகள்) உள்ளன. இவற்றைக் கல்வீடுகள், தொப்பிக் கற்கள், பஞ்சபாண்டவர் குகை, குள்ளர் வீடு என்றெல்லாம் மக்கள் அழைக்கின்றனர். இப்பெயர்களோடு அவர்கள் வழங்கும் பெயரொன்று நோக்கத்தக்கதாகும். அப்பெயர் வருமாறு, "வாளியர் கூடாரம்" மலைபடுகடாமில் வரும் "வாளியர்"என்ற சொல்லாட்சி இன்றைக்கும் சவ்வாதுமலை பழங்குடி மக்கள் சொல் வழக்கில் உள்ளது. வாளியர் – வீரர், கூடாரம் – அவர் வாழ்ந்த இடம் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் தற்போது பெருங்கற்கால மனிதர்களின் புதைவிடமாக இவை உள்ளன.

குறிப்பாக கீழ்ச்சேப்பிளி, கள்ளிப்பாறை, மண்டப்பாறை(வீரப்பனூர்), கல்லாவூர், கோம்பை போன்ற சவ்வாதுமலையின் பரவலான மலைப்பகுதிகளில் கற்திட்டைகள் காணப்படுகின்றன. ஆனால் கீழ்ச்சேப்பிளி, கள்ளிப்பாறைப் பகுதிகளில் மட்டும் மக்கள் வாளியர் கூடாரம் என்று அழைக்கின்றனர்.

கூத்தர்கள் உயர்ந்து ஓங்கிய பெரிய மலைகளை ஏறி வந்தனர் என்று இந்நூல் உரைக்கிறது. இதனை,

*“உயர்ந்தோங்கு பெருமலை ஊறின் றேறலின்” - (மலைபடு – 41)*

*என்னும் பாடலடி உணர்த்துகிறது.*

*பெருமலை என்றது போல் நெடுமலை என்றும் புலவர் குறிக்கிறார்.*

*“குடிஞை இரட்டும் நெடுமலை அடுக்கத்துக்*

*கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிச்*

*சுரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி*

*முரஞ்சுகொண் டிறைஞ்சின*

*அலங்குசினைப் பலவே”*

*(மலைபடு 141 – 144)*



*பலாப்பழங்கள் நிறைந்த மரம்*

*சிறுபறை போலப் பேராந்தையின் பேடும், சேவலும் ஒன்றை ஒன்று மாறி மாறிக் கூப்பிடுகின்ற நெடியமலை முழுமையும் பலாமரங்கள் செறிந்திருக்கும் என்கிறது.*

*இங்குப் பெருமலை என்பது உயர்ந்த சிகரங்களையும், நெடுமலை என்பது பரப்பளவில் நெடியதாக, அதாவது சவ்வாதுமலை அமிர்தியில்(வேலூர்) இருந்து சிங்காரப் பேட்டை வரை நெடிதாக ஏறத்தாழ 225 கி.மீ சுற்றளவுடன் உள்ளது. (அமிர்தி – போளூர் 40கி.மீ, போளூர் – செங்கம் 60கி.மீ, செங்கம் – சிங்காரப் பேட்டை 25கி.மீ, சிங்காரப் பேட்டை - ஆலங்காயம் 50கி.மீ, ஆலங்காயம் – அமிர்தி 50கி.மீ) இம்மலை முழுமையும் பலாமரங்கள் மிகுந்திருப்பதை இன்றளவும் காணலாம்.*

*எருமைகள் கிடந்தாற் போல நீங்கள் செல்லும் வழிகளில் கற்பாறைகள் இருக்கும் என்று பெருவழிப் பாதையின் இயல்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை,*

*“மேதியன்ன கல்பிறங்கு இயவின்” - (மலைபடு – 113)*

நாடுகளை எல்லாம் காணாயிருக்கின்ற அகன்ற இடத்தையுடைய மலையை மெல்ல மெல்ல கடந்து செல்லவும் என்பதை,

*"நாடுகாண் நனந்தலை மென்மெல அகன்மின்"*

*(மலைபடு – 270)*

*இவ்விடத்தில் இருந்து தன் நாட்டின் பல ஊர்களைக் காணலாம். அதாவது பார்வை இடம் (Vision Point) என்று கூறலாம். இவ்வாறாக மலையின் வழியைப் புலவர் எடுத்துரைக்கிறார்.*

மேலும் இம்மலையிலுள்ள குறுங்காடுகளில் குறவரும் அறியாத வழிகள் பல உள்ளன. வழி தவறிப் போகும் போது உங்கள் இசைக் கருவிகளை மீட்டினால், அருவி ஒழுகும் உச்சி மலையிலே உள்ள காட்டைக் காத்தருளும் கானவர் பலரும் நீரிலே மூழ்குவோரை, காப்பது போல உங்களைக் காத்து நீங்கள் உண்ணப் பழமும், சூடப் பூக்களும் தருவர்.

"குறவரும் மருனுங் குன்றத்துப் படினே
அவன்கட் பாறைத் துவன்றிக் கல்லென
இயங்கல் ஓம்பிநும் மியங்கள் தொடுமின்
பாடின் அருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவர் உளரே
புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற்கினிய பழனுங் கண்டோர்
மலைதற் கினிய பூவுங் காட்டி"

*(மலைபடு – 275 – 283)*

இங்கு கானவர் காடுகாத்து உறைதலும், வேற்றுநில மனிதர் எவர்வரினும் இம்மலையில் அச்சம் இல்லை என்பதையும் வலியுறுத்துகிறது.

**புல் முடித்தல்**

சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணையில் எங்கும் காணப்படாத அரிய செய்தியாக, நன்னனின் மலை நாட்டில் செல்லும் வழிப்போக்கர்கள் பாதையை தெளிவாக அறிந்து கொள்ள புல் முடிக்கும் வழக்கத்தை மலைபடுகடாம் கூறுகிறது.

"பண்டு நற்க அறியாப் புலம் பெயர் புதுவிர்

சந்து நீவிப் புல் முடிந்து இடுமின்" – (மலைபடு 392 – 393)

இதன் மூலம் பாதை அறியமுடியாத பல குறுங்காடுகளைக் கொண்டதாக இம்மலை விளங்கியதை உணர முடிகிறது.

புதிதாக இம்மலையைக் காண்போருக்கு தலை நடுக்கம் ஏற்படும் மலைப்பகுதி என்பதை,

"குறியவும் நெடியவும் ஊழிழிபு புதுவோர்

நோக்கினும் பனிக்கும் நோய்கூர் அடுக்கத்து"

(மலைபடு 288 - 289)

என்னும் அடிகளால் அறியலாம்.

**மலைவாழ் மக்களின் தொழில்கள்**

"வினையே ஆடவர்க்கு உயிரே" என்பது தொழில் பற்றியு சங்கத்தமிழரின் சிந்தனையாகும். மலை நிலத்தில் வாழும் மக்கள் மேற்கொண்ட தொழில்களை மலைபடுகடாம் வழி இப்பகுதி ஆராய்கிறது.

**1. வேட்டைத்தொழில்**

யானையைப் பிடித்தல்(325-327), முள்ளம்பன்றியால் தாக்குண்ட கானவன் அழுதல்(300-301) போன்ற செய்திகள் மலை நில வேட்டைச் செய்திகளை வெளிப்படுத்துகின்றன. திசைமயங்கும் இரவினும் முறியாத (வலிமை) வில்லையுடையவராய் விலங்குகளைக் குறவர் தேடித் திரிவர். இதனை,

"தேஎ மருளும் அமைய மாயினும்

இறாஅவன் சிலையர் மாதேர்பு கொட்கும்

குறவரும் மருளும் குன்றம்"

(மலைபடு 273 – 275)



வேட்டைச்சாமி - கீழூர்

என்னும் பாடலடிகள் மூலம் மலையில் வாழும் குறவர் மக்கள் இரவில் வேட்டை விலங்குகளைத் தேடிச் செல்வர் என்பதை அறிய முடிகிறது. இன்றைக்கும் சவ்வாதுமலையிலுள்ள புதூர் நாட்டிற்கு உட்பட்ட கீழூர் சிற்றூரில் இரவில் வேட்டையாடுதல் மட்டுமின்றி வேட்டைச்சாமி என்னும் தெய்வத்தை வழிபட்டு வணங்கியப் பின்னரே வேட்டைக்குச் செல்கின்றனர். அப்பொழுது தான் வேட்டை விலங்குகள் சிக்கும் என்பது இம்மலை மக்களின் நம்பிக்கையாக உள்ளது. இது சங்ககாலம் முதல் சவ்வாதுமலை மக்களின் வாழ்வியலில் வேட்டைத் தொழிலின் நீட்சியாகக் காணமுடிகிறது.

**2. பன்றி வேட்டை**

விளைந்து முற்றிய தினைபுனத்தை அழித்தலாலே காட்டுப்பன்றிகள் வரும் வழிதோறும் பெரிய கற்பொறிகளை வைத்துப் பன்றிகளைப் பிடித்துள்ளனர்.

இந்தக் கற்பொறி என்பது மலைமக்களின் அறிவு மற்றும் அறிவியல் நுட்பத்திற்குத் தக்கதொரு சான்றாகும். ஏனெனில் பெரிய உருவம் கொண்ட வலிமையான பன்றிகளைப் பிடிக்க கற்பொறியை அறிவு நுட்பத்தோடு செய்து வேட்டையாடி இருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும். இதனை,

"விளைபுன நிழத்தலிற் கேழல் அஞ்சிப்

புழைதொறு மாட்டிய இருங்கல் அரும்பொறி'' - (மலைபடு 193 – 194)

என்னும் பாடலடிகள் சான்று பகர்கின்றன.

மேலும் கிழங்குகளை அகழ்ந்த பன்றிகளை, கானவர் பரண் மீது அமர்ந்து பயிர்க்காவல் செய்து அம்பு எய்வர். பன்றியின் மேல் தைத்த அம்பினால், பன்றி நீண்ட தொலைவில் வீழ்ந்து இறந்து கிடக்கும். அப்பன்றியின் இறைச்சியை மலைப்பாதையில் பயணிக்கும் கூத்தர்கள் உண்டும் பயணத்திற்கு எடுத்தும் சென்ற செய்தி பதிவாகியுள்ளது. இதனை,

''நிறப்புண் கூர்ந்த நிலத்தின் மருப்பின்

நெறிக்கெடக் கிடந்த இரும்பிணர் எருந்தின்

இருள்துணிந் தன்ன ஏனங் காணின்'' - (மலைபடு 245 - 247 )

இப்பாடலடிகள் மலைவாழ் மக்களின் வேட்டைத் தொழில் நுட்பத்தைப் பதிவு செய்துள்ளன.

**3. தேனெடுத்தல்**

மலையின மக்களின் முக்கியத் தொழில்களில் ஒன்று தேன் எடுத்தல். குரங்களும் ஏற முடியாத காண்பதற்கு இனிய மலை உச்சியில், கண்ணேணியை நிலைபெற நாட்டி அதன் வழியே ஏறி தேனீக்கள் ஈட்டி வைத்த தேனை அழித்துக் கொண்ட கொள்ளையால், அத்தேனீக்களின் சிற்றரண்களை அழித்து கானவர் எழுப்பிய மகிழ்ச்சி ஓசையை,


''கலைகை யற்ற காண்பின் நெடுவரை

நிலைபெயன் திட்ட மால்புநெறி யாகப்

பெரும்பய் தொகுத்த தேங்கொள் கொள்ளை

அருங்குறும் பெறிந்த கானவர் உவகை''

(மலைபடு 315 – 318)



தேன் கூடுகள் நிறைந்த மரம்

இப்பாடலடிகளில் "மால்பு" என்னும் கணுக்கள் கொண்ட ஏணியைக் கொண்டு, தேனீக்களின் சிற்றரண் அதாவது தேன் என்பது செல்வத்திற்கும், சிற்றரண் என்பது பாதுகாப்பாக நிற்கும் தேனீக்களுக்கும் உவமை. தேனீக்களோடு போர் செய்து கானவர் வெற்றிக் கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததை அறிய முடிகிறது.

இந்த கண்ணேணி என்பது ஒற்றைக் கணுக்கனுடன் இருக்கும் ஏணியாகும். இது நீண்ட மூங்கிலை அதன் கணுவுடன் வைத்து ஏறுவதற்குப் பயன்படுத்திய ஏணியாகும். இந்த ஒற்றை ஏணியை இன்றும் சவ்வாது மலைவாழ்மக்கள் பயன்பாட்டில் வைத்துள்ளனர்.

**வேளாண்மை**

மலை நிலத்தில் வேட்டையாடுதல், தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் மட்டுமின்றி வேளாண்மையும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. தினை, ஐவனம் (மலைநெல்), வரகு, எள், வெண்ணெல், மூங்கில்நெல், கரும்பு, அவரை, வாழை, இஞ்சி உள்ளிட்ட பயிர்களை வேளாண்மைச் செய்துள்ளனர்.

நன்னன் நாட்டின் மலை நிலத்திலே மின்னல் மின்னி மழையைத் தோற்றுவிக்கும். இட்ட வித்துக்கள்(விதைகள்) எல்லாம் உழவர் விரும்பியபடி விளையும் தன்மை கொண்டது என்பதை,

"வான மின்னு வசிவுபொழிய ஆனாது
இட்டவெல்லாம் பெட்டாங்கு விளைய
பெயலொடு வைகிய வியன்கண் இரும்புனத்து"

(மலைபடு 97 – 99)



மலை வேளாண்மை

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

**எள்**

*"எள்" விதைப்பு வேளாண்மைப் பற்றிக் குறிப்பிடும் போது, எள்ளின் தோடுகள் நீலமணியைப் போல நிறத்தைப் பெற்று எழும்படி வளமாக விளைந்தன. மகுளி என்னும் நோய் பாயவில்லை. விதைக்கப்பட்டக் கொல்லையின் பக்கத்தே மழைத்துளிகளால் நிரம்பிய சுனைகள் இருந்தன. ஒரு பிடியில் ஏழு காயாக இருக்கும்படி நெய் மிக்கவையாய் வளர்ந்தன என்பதை,*

*"நீலத்தன்ன விதைப்புன மருங்கின்*

*மகுளி பாயாது மலிதுளி தழாலின்*

*அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்*

*கௌவை போகிய கருங்காய் பிடியேழ்*

*நெய்யென வொழுகின" - (மலைபடு 102 – 106)*

*இப்பாடலடிகள் சில நுட்பமான வேளாண்மைக் குறிப்புகளைத் தருகின்றன. எள் பயிரிடும் போது நீர் ஊறும் பக்கத்தில் (அ) நீர் பாயும் இடத்தில் விதைத்தல் வேண்டும். இதன்படி செய்தால் ஒரு பிடியில் ஏழு எள் விளையும், மகுளி நோய் (அரக்கு) பாயாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியம். இவ்வாறு இருந்தால் நெய் மிகுதியாகக் கிடைக்கும்.*

*இங்கு நெய் என்பது எண்ணெயைக் குறிக்கும். மலைமக்கள் எள் பயிரிட்டு எண்ணெய் எடுத்து அதில் பண்டங்களைச் சமைத்து உண்டனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.*

**அவரை**

*தினைப்பயிர் அறுவடை செய்த இடங்கள் தோறும் தயிர் சிதறிக் கிடந்தாற் போலத் தம் மலர்களை உதிர்த்த அவரைகள் அரிவாளைப் போன்ற காய்களோடு காட்சியளித்தன.*

*“விளைதயிர்ப் பிதிர்வின் வீயுங் கிருவிதொறும்*

*குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை” - (மலைபடு 109 - 110 )*

*இப்பாடலடிகள் தினையை அறுவடை செய்வதற்கு முன்பாகவே அவரையும் கலப்புப் பயிராக வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் தான் தினையரிந்த நிலத்தில் அவரைக் காயுடன் காட்சித் தருவதைப் புலவர் பதிவு செய்துள்ளார்.*

**வரகு**

*வரகு பயிரும் சிறப்புடன் விளைந்தன. தருக்கம் செய்வன் விரல் (ஆள்காட்டி விரல்) இணைந்தாற் போல வரகுகள் விளைந்து காட்சித் தந்தன. இதனை,*

*“வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி*

*இரும்புகவர் அற்றன பெரும்புன வரகே” - (மலைபடு 112 - 113)*

*என்னும் பாடலடிகளால் அறியலாம்.*

**தினை**

*மலைப்பகுதிகளில் விளையும் முக்கிய வேளாண் பயிர்களில் தினைக்கு முக்கிய இடமுண்டு. தினைகள் முற்றிய நிலையில் உள்ளன. இவைப் பொய்யாகப் போர் புரியும் யானைக் கன்றுகளின் பிணிந்த துதிக்கைப் போலக் காட்சித் தருவதை,*

*“பொய்படு கயமுனி முயங்குகை கடுப்பக்*

*கொய்பத முற்றின குலவுக்குரல் ஏனல்” – (மலைபடு 107 – 108)*

*என்னும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.*

**நெல் வகைகள்**

பால் கட்டி சிறிது முற்றிய ஐவன நெல்லும், வெண்ணெல்லும் காற்று ஊடறுக்கப்பட்டு நன்றாக விளைந்தன. மேலும் மூங்கில் நெல், அவலிடிக்கும் பதத்தினைப் பெற்று விளங்கியது. இதனை,

''பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு

வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்''

(மலைபடு 114 – 115)

''அவிற்பதங் கொண்டன அம்பொதித் தோரை''

(மலைபடு – 121)

இப்பாடலடிகள் மூன்று விதமான நெல்வகைகளைப் பற்றிப் பேசுகின்றன. ஐவனம்(மலைநெல்), வெண்ணெல் இவை இரண்டும் வேளாண்மையால் பயிரிடப்பட்டவை. நெல்மணிகளில் பால் முற்றுதல், காற்று நன்றாக செல்லுமாறு இடைவெளி விட்டு இவ்விரண்டு பயிர்களும் இருந்தன என்பது இன்றைய வேளாண்மைக்கும் அறிவுறுத்த வேண்டியச் செய்திகளாகும்.

விதைக்காமல் காட்டிலுள்ள மூங்கில் மரங்களில் விளையும் நெல், மூங்கில் நெல் எனப்படும். இதுவும் உணவுக்கு ஏற்ற பதத்தைப் பெற்றதைப் புலவர் வெளிப்படுத்துகிறார். மலையின மக்களும் பல்வகைப்பட்ட நெல்வகை உணவுகளை உட்கொண்ட செய்திப் பெறப்படுகிறது.

**கரும்பு**

இனிய கரும்பு பயிர்களும் மலை நிலத்தில் விளைந்த சிறப்பினை,

''வேலீண்டு தொழுதி இரிவுற் றென்னக்

*காலுறு துவைப்பிற் கவிக்கனைத் திறைஞ்சிக்*

*குறையறை வாரா நிவப்பி னறையுற்று*

*ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" – (மலைபடு 116 -119)*

*குறைவில்லாமல் நன்றாக வளர்ந்த வெட்டுதற்குரிய வளர்ச்சியை உடைய கரும்புகள் ஆலைகளுக்கு எடுத்துச் செல்லும் செழிப்போடு இருந்தன. இங்கு கவனிக்கத்தக்க செய்தி, கரும்புகளை சாறு பிழியும் கரும்பாலைகள் இருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது.*

**வெண்சிறுகடுகு**

தோட்டங்களிலே ஏர் உழாமல் விதைக்கப்பட்டுப் பின்னர்க் களைக் கொட்டால் கொத்தி வெண்சிறுகடுகை உழவர் விதைத்தனர்.

*"தொய்யாறு வித்திய துளர்படு துடவை*

*ஐயவி யமன்ற வெண்காற் செறுவின்" - (மலைபடு 122 – 123)*

*இப்பாடலடிகளில் துளர் (களைக்கொத்தி) என்னும் வேளாண் பொருள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழக்கத்தில் இருந்ததையும், வெண்சிறு கடுகைக் கொத்தி, நீர்ப்பாய்ச்சினால் போதும், பயிர் விளையும் என்ற அறிவையும் மலைமக்கள் அறிந்திருந்தனர்.*

**இஞ்சி, கவலை**

*இஞ்சி அழகு முதிர்ந்து உறைப்புடன் பயிரிடப்பட்டதை,*

*"செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்*

*காயங் கொண்டன இஞ்சி" - (மலைபடு 125 -126)*

*கவலை என்னும் கிழங்கு வகை, குழிகள் தோறும் வளர்ந்தன. இதனை,*

*"வயவுப்பிற முழந்தாள் கடுப்பக் குழதொறும்*

*விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை"*

*(மலைபடு 127 – 128)*

*என்னும் பாடலடிகளால் அறியலாம் .*

***மலைவாழை***

*முக்கனி பழவகைகளில் வாழையும் ஒன்று. இதற்கு "உதிரன்" என்ற பெயரும் உண்டு. கௌசிகனார், யானையின் துதிக்கை மண்தரையில் தொடுவதைப் போல் வாழை நெருங்கி வளர்ந்து தரையினைத் தொட்டு முதிர்ந்து நின்றன என்கிறார்.*

*"காழ்மண்டு எஃகம் களிற்றுமுகம் பாய்ந்தென*

*ஊழ்மலர் ஒழிவகை உயர்முகம் தோய*

*துறுகல் சுற்றிய சோலை வாழை" – (மலைபடு 130 – 132)*

*இன்றைக்கும் மலைச்சரிவினை பகுதியிலும் மலை நிலங்களிலும் வாழை பயிரிடப்படுகிறது. சவ்வாதுமலை வாழைகள் பெங்களூர், சென்னை போன்ற பெருங் நகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் புதூர் நாட்டுச் சந்தையில் வாழைக் காய்களைப் பல ஊர்களுக்கு ஏற்றுமதி செய்வதைக் காண முடிகிறது.*

***பண்பாட்டுக் கூறுகள்***

*பண்பாடு என்பது ஒரு இனத்தின் தனித்துவமான அடையாளங்களாகும். மரபு வழியாக தொடர்ந்து வரும் சமூக கூறுகளே பண்பாடு ஆகும். அவ்வகையில் மலைபடுகடாம் எடுத்துரைக்கும் குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டுக் கூறுகள் இங்குப் பாடுபொருட்களாகக் கொண்டு ஆராயப்படுகின்றன.*

**திருவிழா**

*மக்கள் மகிழ்வோடு ஒன்று கூடும் நிகழ்விற்குத் திருவிழா என்று பெயர். மலையில் வாழும் மக்கள் தங்கள் மகிழ்வினை ஒன்று கூடி வெளிப்படுத்திய செய்திகளை மலைபடுகடாம் வெளிப்படுத்துகிறது.*

*"குரூஉக்கண் பிணையல் கோதை மகளிர்*

*முழவுத்துயில் அறியா வியலு ளாங்கண்*

*விழவின் அற்றவன் வியன்கண் வெற்பே" - (மலைபடு 349 - 351)*

*பலவகைப்பட்ட நிறமும் மணமும் கொண்ட மலர்களை மாலையாகக் கோர்த்து மகளிர் அணிந்தனர். இவர்களின் ஆடுதலுக்கு ஏற்ப முழவின் (மத்தளம்) இசைக்கும் அகன்ற ஊரில், திருநாள் போல் இவர்களின் ஆட்டம் இருக்கும். திருவிழாவின் போது மக்கள் ஒன்று கூடி இசையோடு, ஆடல், பாடல், மாலை அணிதல் ஆகியவை தனித்த பண்பாட்டு அடையாளங்களை இப்பகுதி விளக்குகிறது.*

**பூச்சூடுதல்**

*பெண்கள் மாலையாக மலர்களை அணிதல் மட்டுமின்றித் பெண்கள் தலையில் பூச்சூடும் மரபை,*

*"நறுமலர் அணிந்த நாறு இருமுச்சிக்*

*குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி" - (மலைபடு 182 – 183)*

*என்னும் பாடலடிகளால் அறியலாம்.*

**வெறியாட்டு**

குறிஞ்சி நிலப் பண்பாட்டில் வேலன் வெளியாட்டு சிறப்புமிக்க பண்பாட்டுக் கூறாகும். பலவகைப்பட்ட இசைக் கருவிகள் ஒலிக்க, வேலன் வரப்பெற்ற பூசாரி ஆவேசத்தோடு நடனம் புரிந்து ஆடுகளைப் பலியிட்டுச் செய்யும் சடங்காகும். இவ்விடத்தில் மலர்கள், தானியங்கள், இசைக்கருவிகள், குருதிப்பலி ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தது.

மலைபடுகடாம் வேலன் வெளியாட்டைப் பற்றிப் பேசுகிறது. செங்காந்தள் மலர்களின் மொட்டுக்கள் சிவந்து காணப்படும். இம்மொட்டினை ஊன் (இறைச்சி) என்று கருதி பருந்துகள் எடுக்கும். அவை ஊனல்ல என்பதை உணர்ந்து கீழே எறியும் அம்மெட்டுக்கள் வெறியாட்டுக் களம் போல் தோன்றும் என்று புலவர் கூறுவது, வெறியாட்டிடத்தில் ஆட்டின் இறைச்சியும் குருதியும் சிந்தி செங்காந்தகள் மலர் போல் சிவந்திருப்பதற்கு செங்காந்தள் மலரை உவமையாக்கி உள்ளார் பெருங்கௌசிகனார்.

“தீயனன்ன ஒண்செங் காந்தள்

தூவற் கலித்தபுதுமுகை ஊன்செத்து

அறியா தெடுத்த புன்புறச் சேவல்

ஊஉ னன்மையி னுண்ணா துகுத்தென

நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்

**வெறிக்களம்** கடுக்கும் வியலறை தோறும்”(மலைபடு 145 – 150)

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

**திருமணம்**

மலையின மக்களின் திருமணச் சடங்கை விரிவாகப் புலவர் கூறவில்லை. ஆனால் திருமணம் நிகழும் இல்லம் பலவகைப்பட்ட நறுமணத்தோடு இருப்பது போல, மலை முழுதும் மணம் கமழ்வதாகக் கூறுகிறார்.

*“மணஇில் கமமு மாமலைச் சாரல்” - (மலைபடு – 151)*

என்னும் பாடலடி சான்று கூறுகிறது.

**கூத்தும் இசையும்**

பழந்தமிழர் பண்பாட்டில் இசைக்கும், கூத்திற்கும் தனித்துவம் உண்டு. நிலவகைகளுக்கு ஏற்ப கலைகள் வளர்ச்சிப் பெற்றிருக்கின்றன. அவ்வகையில் மலைபடுகடாம் குரவைக் கூத்து குறத்தியின் இசைப்பாடல், தினைக்குற்றும் மகளிரின் வள்ளைப்பாட்டு ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளது.

*“நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு*

*மான்தோற் சிறுபறை சுறங்கக் கல்லென*

*வான்றோய் மீமிசை அயருங் **குரவை**” - (மலைபடு 320 – 323)*

இப்பாடலடிகள் விடியற் காலையில் நறவு (கல்) உண்ட குறவர் தம் மனைவியரோடு, மான்தோலால் செய்யப் பெற்ற சிறுபறையை முழக்கி மலை உச்சியில் குரவைக் கூத்து ஆடி மகிழ்ந்தனர். இங்கு மான் தோளினால் செய்யப்பெற்ற இசைக்கருவி மலைமக்களின் தனித்துவத்தைக் காட்டும் பண்பாட்டு அடையாளமாகும். குறவர்களின் வேட்டை விலங்குகளின் மான்களுக்கு முக்கியத்துவம் உண்டு. இன்றைக்கும் மான் தோலால் பிணையப்பட்ட வடங்கள் (கயிறு) பழமையான சவ்வாதுமலை ஊர்களில் இருப்பதைக் காணமுடிகிறது.

**இசை மருத்துவம்**

குறவனின் மார்பில் புலி தாக்கியக் காரணத்தினால் அவன் அழும் ஒலி கேட்கிறது. குறவனின் வலியைப் போக்க அவன் மனைவி (குறத்தி) இசைப் பாடலைப் பாடி புண்ணை ஆற்றிய மருத்துவத் துறையோடு தொடர்பு கொண்ட இசைப்பாடல் பாடியதை,

*“கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்*

*நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென*

*அறல்வாழ் கூந்தற்* ***கெடிச்சியர் பாடல்" -*** *(மலைபடு 302 – 305)*

*மேலைநாட்டில் நோயாளிளுக்கு இசை மூலம் மருத்துவம் செய்யும் முறை தற்காலத்தில் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இசையால் நோயைக் குணப்படுத்த முடியும் என்பதைச் சங்ககாலக் குறிஞ்சி நில மக்கள் அறிந்திருந்தனர் என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது.*

***வள்ளைப்பாட்டு***

*குறிஞ்சி நில மளிர் தினைக்குற்றும் போது பாடப்படும் பாடலுக்கு வள்ளைப்பாட்டு என்று பெயர். வள்ளைப்பாட்டு இசையோடு பாடப்படுவதாகும் இதனை,*

*"தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்"*

*- (மலைபடு - 342)*



வள்ளைப்பாட்டு - திணைக்குற்றுதல்

*என்னும் பாடலடியால் அறியலாம். மலையில் ஒலிக்கும் பல்வேறு ஓசைகளில் குரவைக் கூத்தும் பாட்டொலிகளும் இடம் பெற்றுள்ளன.*

***நடுகற்கள்***

*தமிழர் பண்பாட்டில் தெய்வ நம்பிக்கை வீரியமுடையது. தங்களோடு வாழ்ந்து, தங்களின் ஆநிரைகள் மற்றும் நாட்டினைக் காத்து உயிர்விட்ட வீர மறவர்களை சங்க நூல்கள் மற்றும் திருக்குறள் (771) ஆகிய நூல்கள் நடுகற்களையும் தெய்வங்களாகவே போற்றுகின்றன. புறநானூற்றுப்பாடல் (335) நடுகல்லை விட சிறந்த தெய்வமொன்று தமிழர் வழிபாட்டில் இல்லை என்று உரைக்கிறது.*

மலைபடுகடாம் நூலில் இரண்டு இடங்களில் நடுகல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. நடுகல்லில் உருவங்கள் மற்றும் ஓவியங்கள் இருந்ததையும் வழிபடும் கடவுளாக நடுகல் இருந்ததையும் அறிய முடிகிறது.

"ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல் ஏசு கவலை எண்ணுமிகப் பலவே"

(மலைபடு 386 - 389)



பல்லவர் கால நடுகல் - மொழலை

பரிசு பெற்ற கூத்தன் பரிசு பெற இருக்கும் வறிய கூத்தனுக்குச் செங்கண்மா நகருக்கு வழி கூறும் போது, யானைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பொருந்தினாற் போல நெருங்கின, குன்றுகளிடத்து, மழையினால் செழுமையுற்ற பல காடுகள் உண்டு, ஏவல் கேளாத பகைவர் போரில் தோற்று புறமுதுகிட்டனர். அதனைக் கண்டு பெறாத புறங்கொடுத்த மறவர் உயிர் கொடுத்ததற்கு இது நல்ல காலமென்று நாணத்தினால் மீண்டும் வந்து உயிரைக் கொடுத்தனர்.

"செல்லும் தேஎத்துப் பெயர்மருங்கு அறிமார்
கல்லெறிந்து எழுதிய நல்லரை மார அத்த
கடவுள் ஓங்கிய காடு ஏசு கவலை"

(மலைபடு. 394 - 396)



பல்லவர் கால நடுகல் – மேல்பட்டு

அவர்கள் புகழினை எழுதி நட்ட பல கற்களையுடைய, புறமுதுகிட்டு ஓடினோரை இகழும் பல வழிகள் அக்காட்டிடத்தே உண்டு. அந்நடுகற்களிலுள்ள தெய்வங்களுக்கு விருப்பமுண்டாகும்படி நுமது யாழை வாசித்து விரைந்து செல்வீர்களாக என நடுகல்லைப் பற்றியும், வீர மரணம்



அடைந்தவரின் புகழினையும் பெருங்கௌசிகனார் கூறுகிறார். இங்கு ஆநிரைகளைக் கவர்ந்து வரும் வெட்சியார் மீது

சோழர் கால நடுகற்கள்

ஆநிரைகளை மீட்க வரும் கரந்தையார் போரெடுக்கும் நிகழ்வு வெளிப்படுகிறது. குறவர்கள் (தொல் குடியினரில் ஓரினத்தவர்) ஆண்மையோடு போரிட்டு உயிரிழந்த நிகழ்வை இப்பகுதி விளக்குகிறது.



தற்போது இம்மலை முழுவதும் பல்லவர் (மேல்பட்டு, மொழலை) கால நடுகற்களும், சோழர் (கீழூர், நெல்லிப்பட்டு, சேம்பரை, மொழலை, வழுதலம்பட்டு) நடுகல் மற்றும் கல்வெட்டுகளும், சம்புவராயர் சம்புவராயர் நடுகல்

(கீழூர்) நடுகல் கல்வெட்டும், நாயக்கர் (மேல்பட்டு, மொழலை) கால நடுகல் மற்றும் கல்வெட்டுகளும் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. ஆனால் சங்ககால நடுகல்லோ கல்வெட்டோ இதுவரை கிடைக்கவில்லை. இது ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். எனவே மலைபடுகாடம் கூறும் நடுகல் வழிபாடு இன்றைக்கும் சவ்வாது மலைப் பகுதியில் சிறப்புடன் வழிபடப்பட்டு வருவது நோக்கத்தக்கது.

**குறிஞ்சி நில மக்களின் விருந்தோம்பல்**

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது தனித்த அடையாளத்தோடு விளங்குகிறது. விருந்தோம்பல் பண்பாட்டைத் திருவள்ளுவரும் புகழ்ந்துரைக்கிறார். பண்டைக் காலத்தில் வழிச் செல்வோரைப் பாதுகாத்து உணவளித்தல் சிறந்த அறமாகத் தமிழர் போற்றினர் .

நன்னன் சேய் நன்னனைக் காண செங்கண்மாவுக்குச் செல்லும் கூத்தர்கள் மலை, காடு, கொடிய விலங்குகள் என்று அரிய பாதையைக் கடந்து செல்கின்றனர். அவர்களின் பயணம் விடியல், பகல் என்று இருக்கிறது. உணவு மற்றும் இரவு தங்குதல் முக்கிய இடம் வகிக்கிறது. இதனைக் குறிஞ்சி நில மக்கள் கூத்தர்களைத் தம்மவர் போல் போற்றி, அவர்கள் உண்ண உணவுகளை வழங்கி பாதுகாத்துள்ளனர்.

கானவரின் சிறிய ஊர் வழியாகச் சென்றால் பன்றியின் தசையை உணவாகப் பெற்று, மேலும் அவ்விடத்தே இரவு தங்கிச் செல்லலாம். என்பதனை,

“தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்

சிறுகட் பன்றிப் பழுதுளிப் போக்கிப்

பொருதுதொலை யானைக் கோடு சீராகத்

தூவொடு மலிந்த காய காவைர்

செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே

இரும்பேர் ஒக்கலொடு பதம்மிகப் பெறுகுவிர்

அன்றவ ணசைஇ அற்சேர்ந் தல்கி”

(மலைபடு.152-158)

இப்பாடலடிகள் புது வருவாயையுடைய கானவர் கூத்தருடைய பெரிய சுற்றத்திற்கு உணவினை அளித்த செய்தியினைப் பதிவுச் செய்கிறது. இங்குக் கூட்டத்தோடு சென்ற பலருக்கு உணவளித்த விருந்தோம்பல் சிறப்புக்குரியது. மீண்டும் கூத்தர் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து மலையை அடுத்திருந்த சிறிய ஊர்களைச் சேர்ந்து, பெரும் சிறப்புமிக்க நன்னனின் கூத்தர்கள் என்று கூறினால், மலைமக்களின் இல்லத்தில் நீங்கள் உங்கள் இல்லம் போல் கேட்காமலேயே உள் நுழையலாம். மேலும் உறவினர் போல் அவர்களோடு பேசி, நெய்யில் வெந்த இறைச்சிப் பொறியலோடு தினையரிசி சோற்றை உங்களுக்கு உண்ணத் தருவர்.

"சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி

நோனாச் செறுவின் வலம்படு நோன்றான்

மான விறல்வேள் வயிரிய மெனினே

நும்மில் போல நில்லாது புக்குக்

கிழவர் போலக் கேளாறு கெழீஇச்

சேட்புலம் பகல இனிய கூறிப்

பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

குரூக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவீர்" - (மலைபடு 162 – 169)

இப்பாடலடிகள் நன்னனின் கூத்தர் என்று சொன்னாலே கானவர், உங்களைத் தங்கள் வீடுகளில் உரிமையோடு அனுமதிப்பர். உறவினர் போல் பாவிப்பர், அவர்களிடத்திலுள்ள உயர்ந்த பொருட்களான தினைச் சோற்றையும், இறைச்சி உணவை நெய்யில் பொறித்தும் தருவர். அதைவிட முக்கியம் கூத்தர்களின் பயண வருத்தம் தீர இனிய சொற்களைப் பேசி உங்களைப் போற்றுவர். இங்கு விருந்தினரை எவ்வாறு போற்றுதல் வேண்டும் என்பதை புலவர் பெற வைக்கிறார்.

மலைவாழ் மக்கள் மலையிலிருந்து கொண்டு வந்த மலைபடு பொருளோடு, மூங்கில் குழாயில் உள்ள தேனால் செய்த கள்ளையும், பின்பு நெல்லாற் செய்த கள்ளையும் உண்ணத் தருவர். மேலும் பலாபழத்தின் விதையோடு கடமானின் கொழுத்த தசையினையும், பெண்ணாய் கடித்து எடுத்து வந்த உடும்பின் கறியையும், எய்ப்பன்றியின் தசையையும், மோரை உலையாக வார்த்து அவ்வுலையில் மூங்கில் அரிசியைப் பெய்து, அப்பெரிய காடே மணக்கும் படி கரிய முடியினையுடைய குறமகள் துழாவி ஆக்கிய வெள்ளியச் சோற்றை, விருந்தினரைப் பேற்றோம் என்னும் மகிழ்ச்சியோடு தம் பிள்ளைகளைக் கொண்டு முறைக் கூறி உம்மைத் தடுத்து வீடுகள் தோறும் உணவை உண்ணத் தருவர். இதனை,

''ஏறித் தரூஉம் இலங்குமலைத் தாரமொடு

வேய்ப் பெயல் விளையுள் தேக்கள் தேறல்

குறைவின்று பருகி நறவு மகிழ்ந்து வைகறைப்

பழஞ்செருக் குற்றுநும் அனந்தல் தீர

அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்

வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை

பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ

வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்

இன்புளிக் கலந்த மாமோ ராகக்

கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து

வழையமை சாரல் கமழத் துழைஇ

*நறுமலர் அணிந்த நாறிரு முச்சிக்*

*குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி*

*அகமலி உவகை ஆர்வமோ டளைஇ*

*மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்*

*செருச்செய் முன்பிற் குரிசில் முன்னிய*

*பரிசில் மறப்ப நீடலும் உரியிர்*

*அனைய தன்றவன் மலைமிசை நாடே" - (மலைபடு 170 – 188)*

*இங்குக் கூறப்பட்ட 20 அடிகள் மலைமக்களின் விருந்தோம்பல் மட்டுமின்றி அவர்களின் உணவுகளின் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன. தன்னுடைய மன்னனின் விருந்தினர் என்பதை அறிந்தவுடன் தம் உறவினர் போல் பாவிக்கின்றனர்.*

*1. மலைபடு பொருட்களைப் பரிசாக அளிக்கின்றனர்*

*2. தேன், கள், நெல்கள் உணவைத் தருகின்றனர் (மூங்கிலில் கூழ் போன்ற உணவு பொருட்களை உண்ணும் வழக்கம் இன்றைக்கும் மலைமக்களிடம் உண்டு).*

*3. பலா விதையோடு பலவகைப்பட்ட இறைச்சி (கடமான், பன்றி, உடும்பு) ஆகியவற்றைத் தருகின்றனர். இப்பகுதி குறவரின மக்களின் சில வாழ்வியல் கூறுகளைப் பதிவு செய்கின்றன.*

*இன்றைக்கும் பலா கொட்டையை இறைச்சியோடு சேர்த்து சமைக்கும் வழக்கம் மலைமக்களிடம் உள்ளது. வேட்டைத் தொழிலுக்கு நாய்களைக் குறிப்பாக பெண்நாய்களை உடும்பு போன்ற இறைச்சி உயிரினங்களை வேட்டையாடப் பயன்படுத்தி உள்ளனர். சவ்வாதுமலையிலுள்ள புதூர் நாட்டிற்குட்பட்ட மேல்பட்டு என்னும் சிற்றூரில் நாய் நடுகல் ஒன்று உள்ளது.*

*4. புளிப்புச் சுவைக் கொண்ட மோரை உலையில் கொதிக்க வைத்து, மூங்கிலரிசியை அதில் இட்டு வெண் சோற்றை ஆக்கியுள்ளனர்.*

*5. இவ்வாறாகத தயாரித்த உணவினை அகம்(உள்மனம்) மகிழ்ந்து கூத்தர்களுக்கு அளித்துள்ளனர்.*

*6. மலைவாணர்களின் பிள்ளைகள் கூத்தர்களை உறவுமுறை இட்டு ஒவ்வொரு வீட்டிலும் உணவருந்த அழைத்துள்ளனர்.*

*7. இவ்வாறான உபசரிப்பைப் பெற்ற கூத்தர்கள் பரிசில் பெற, நன்னனைக் காண வந்தோம் என்ற கொள்கையையே மறந்துவிடுவர் என்று உபசரிப்பின் உச்சத்தை இப்பகுதி விளக்குகிறது.*

**வரலாற்று நோக்கில் நவிரமலை**

*நன்னன் சேய் நன்னனின் மலை நவிரமலை. இம்மலையில் கோயில் கொண்ட தெய்வத்தின் பெயர் காரியுண்டிக் கடவுள் என்று மலைபடுகடாம் உரைக்கிறது. இதனை,*

*“நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்*

*பேரிசை நவிர மேஎ யுறையும்*

*காரிஉண்டிக் கடவுள தியற்கையும்” - (மலைபடு 81 - 83)*

*“வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்*

*கழைவளர் நவிரத்து மீமிசை” - (மலைபடு 578 - 579)*

*என்னும் பாடலடிகளின் இரு இடங்களில் “நவிரம்” என்ற சொல் இடம்பெற்றுள்ளது. நவிரமலை என்பது செங்கத்திற்கும் போளூருக்கும் இடைப்பட்டிருக்கும் பருவதமலையே என்று மா. இராசமாணிக்கனார், சதாசிவபண்டாரத்தார் போன்றோர் உரைக்கின்றனர்.*

நவிரமலை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க 3 கல்வெட்டுகள் வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட சவ்வாதுமலை புதூர்நாட்டில் உள்ள கீழூர், சேம்பறை, மொழலை ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இம்மூன்று கல்வெட்டுகளும் நவிரமலை என்னும் சொல்லாட்சியைத் தாங்கி நிற்கிக்றன. மலைபடுகடாமில் கூறப்பட்ட நவிரம் என்ற சொல் சோழர் காலத்திற்கு பிறகு நாயக்கர் காலத்திலும் தொடர்ந்து வந்துள்ளது. எனவே நவிரமலை என்பது புதூர் நாட்டு சவ்வாதுமலையே என்பது உறுதிப்படுகிறது. இம்மூன்று கல்லெட்டு வாசகங்களிலும் முறையே கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு – 1

அரசர் – சோழர் – இராஜதிராஜன், கி.பி 12 ஆம் நூற்றாண்டு

இடம் – கீழூர், புதூர் நாடு

கல்வெட்டு வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீராஜாதிராஜ தேவற்க்கு யா
2. ண்டு முப்பதாவது பங்கள நாட்டு
3. நவிரமலை நரைவிளையுடை
4. ய கயிலாயன் மோட் (டு) கவறை
5. கள் ஜயநு
6. ம் நரைவிலை
7. உடைய கெ
8. த்தன் குடல
9. ந்நும்



நவிரமலை பெயர் தாங்கிய கல்வெட்டு

*10.* இவ்வூரர் வி*( )*

*11.* ஊரன

*12.* மக்குவழ

*13.* க்காடி வ

*14.* ழக்கழி

*15.* ய நாட

*16. ..*றி யப

*17.* ட்டமை


*18.* க்கு கன்

*19.* நாடு

கல்வெட்டு *– 2*

அரசர் – சோழர் – குலோத்துங்கச்சோழர், கி.பி *12* ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு வாசகம்



"ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்து

ங்க சோழ தேவற்கு யா

ண்டு *49* ஆவது ஜயங்

கொண்ட சோழமண்டல

த்து பங்கள நாட்டு தெற்கில்

வகைமேல் வேழநாட்டு குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு

நவிரமலை புனா நாடுடையன்.......”

கல்வெட்டு – 3

அரசர் – நாயக்கர், கி.பி 16 ஆம் நூற்றாண்டு

கல்வெட்டு வாசகம்

1. ஸ்ரீ மது கொட

2. லையில் மயணார

3. சகரல அத்தி வருஷ

4. ம் ஐப்பசி மாதம் பத்தொ

5. ன்பதாம் தியதி நவிரமலை

6. முழலை நாதனுக்கு புது ஊ

7. ர் சர்வ மானியம் விட்ட

8. படி கல்லும் காவோரியும்

9. புல்லும் பூமியும் உளளன

10. வும் யிதுக்கு அகிதம் பண்

11. ணினவன் கெங்கை கரையி

12. ல் குரால் பசுவை கொன்ற பா

13. வத்தே போவான்.



நாயக்கர் கால நடுகல் கல்வெட்டு

இம்மூன்று கல்வெட்டுக்களும் நவிரமலையைக் குறிப்பதால் மலைபடுகடாம் கூறும் நவிரமலை வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு அடங்கிய சவ்வாதுமலைத் தொடரே ஆகும். காரியுண்டிக் கடவுள் என்பது சேம்பறை மலையின் உச்சியிலுள்ள சிவலிங்கம் அல்லது புதூர் நாட்டிலுள்ள மொழலை ஈசுவரன் கோயில் கடவுளாக இருக்கலாம்.

மேலும் கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று செங்கம் ரிசபேசுவரர் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டுத் தொல்லியல் துறையினரால் படியெடுத்து வாசிக்கவும் பட்டுள்ளது. அக்கல்வெட்டு வாசகம் வருமாறு,

"மூவண்டறை தார்மன்னர் மலைப்படைத் தென்மன்னரை
வென்கண்ட திறற் காங்கேயன் கண் சிவப்ப பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சொரி
அலைகடாம் பாட்டுண்டது"

(நன்னன் நாடு மாத இதழ், 1983)

என்னும் கல்வெட்டு வண்டுகள் மொய்க்கும் மலர் மாலைகளணிந்த மன்னர்களின் மலை போன்ற படையையும் தென் மன்னரையும் வெற்றி கண்டவன் காங்கேயன். அவன் கண் சிவந்தான். இந்த வெள்ளம் பெருக்கெடுத்தது, அலை அலையாகக் குருதிப்புனல் ஒலி கூட்டியது எங்கே, முன்பெருங்கால் மலைகடாம் பாட்டினைப் பெற்ற அதே மலையில் என்ற கருத்தை இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

தற்போதைய அரசியல் சூழலில் நாட்டை நல்லாட்சி புரிய ஆட்சியாளர்கள் மாவட்டம், வட்டம், நகரம், கிராமம் என்று பிரித்து ஆட்சி புரிவதற்கு சோழர்களே முன்னோடிகள் என்று இக்கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

*சங்கத்தமிழாரின் திணை நிலை வாழ்வியலில் குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டுக் கூறுகள், வேளாண்மை, தொழில்கள், மலை நிலத்தின் தோற்றம், சிறப்புகள், நடுகற்கள் ஆகியவற்றோடு நவிரமலைப் பற்றிய புதிய ஆய்வுப் போக்கினை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.*

*வேலூர் மாவட்ட திருப்பத்தூருக்குட்பட்ட புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல் நாடு ஆகிய 34 கிராமங்கள் அடங்கிய மேற்கு சவ்வாதுமலைப் பகுதிகளில் கிடைத்துள்ள நவிரமலை பெயர் பொறிக்கப்பெற்ற மூன்று கல்வெட்டுகளும் தமிழ் ஆய்வு உலகில் புதிய புத்தொளியைப் பாய்ச்சியுள்ளதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைத்துள்ளது.*

**ஆய்வுக்குத் துணை நின்ற நூல்**

*1. பத்துப்பாட்டு தொகுதி 2, சோமசுந்தரனார், பொ. வே, கழக வெளியீடு, சென்னை – 600018, பதிப்பு 2017.*

*தகவலாளர் பட்டியல்*

*1. வெங்கடாசலம். கு, தலைவர், தமிழர் கணக்கியல் ஆய்வு மையம், வளையாம்பட்டு, செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.*

*2. வேந்தன். கோ, கீழூர், புதூர்நாடு, சவ்வாதுமலை, வேலூர் மாவட்டம்.*